# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 07 புதன்கிழமை 21.06.2023 கதிர் 08



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# வலி. வடக்கில் காணி சுவீகரிக்கும் வர்த்தமானியை உடன் மீளப்பெறுக! – சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தேவையற்றது. அந்தக் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி உடனடியாக முழுமையாக மீளப்பெறப்பட வேண்டும். திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் செய்ததைப் போன்று வலிகாமம் வடக்கிலும் செய்ய வேண்டும், என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

வலிகாமம் வடக்கில் ஆறாயிரத்து 384 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானி 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது. இந்தக் காணிகளில் சில பகுதிகள் நல்லாட்சி அரசின் காலத்தில் விடுவிக்கப்பட்டிருந்தன. விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்து அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏதுவாக அளவீட்டுப் பணிகள் வலிகாமம் வடக்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த டிசம்பர் மாதமும் அண்மையில் இடம்பெற்ற சந்திப்புக்களிலும் இந்த விடயம் தொடர்பில் பேசியிருக்கின்றோம். வலிகாமம் வடக்கில் ஆறாயிரத்து 384 ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானியே தவறு. அனைத்துக் காணிகளையும் ஒரே வர்த்தமானியில் சுவீகரிக்க முடியாது. அந்த வர்த்தமானியை மீளப்பெற வேண்டும்!,




என்று வலியுறுத்தியிருந்தேன். 2➤

## யாழ்ப்பாணம் – அல்லைப்பிட்டியில் வெட்டிய குழியில் மனித எச்சங்கள்!



யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டி இராண்டாம் வட்டாரப் பகுதியில் கிடங்கு ஒன்று வெட்டப்பட்டபோது, அதற்குள் இருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கட்டுமானம் ஒன்றை மேற்கொள்வதற்காக கிடங்கு வெட்டியபோதே அந்த இடத்தில் மனித எச்சங்கள் தென்பட்டுள்ளன.

குறித்த பகுதி நுழைவதற்கு அனுமதியற்ற பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இன்றைய தினம் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் அகழ்வுப்பணியும் மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# குருந்தூர் மலையில் உதய கம்மன்பில வருகைக்கு எதிராக மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இன்றைய தினம் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.




தண்ணிமுறிப்பு மக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து குருந்தூர்மலை அடிவாரத் தில் ஒன்றுகூடி இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

தண்ணிமுறிப்புப்பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறும், நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த கோரியும், மக்களை மீள்குடியேற்றம் செய்யுமாறும் வலியுறுத்தியுமே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு, திட்டமிட்ட சிங்களமயமாக் 2➤

## குருந்தூர் மலையில் புதிதாகக் கல்வெட்டு

நீதிமன்றக் கட்டளையை மீறி முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தற்போதும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். அத்தோடு, அங்கு புதிதாகக் கல்வெட்டு ஒன்று பதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் குருந்தூர் மலையில் தொடர்ச்சியாக திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் முயற்சி இடம்பெற்று வருகின்றமை அப்பட்டமாகப் புலப்படுகின்றது என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணி முறிப்பு குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் தொடர்ந்தும்



நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், அங்கு செல்பவர்களின் வாகனங்களையும் பதிவு செய்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளையை மீறி அங்கே அமைச்சர் விதுர விக்ரமநாயக்க புத்தர் சிலையை 2➤

## 3,200 கடல் சங்குகளுடன் இருவர் வசமாகச் சிக்கினர்

கற்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 200 கடல் சங்குகளை இன்று பிற்பகல் கைப்பற்றியுள்ளதாகக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு அளவிலான கடல் சங்குகள் 40 சாக்கு மூட்டைகளில் அடைக்கப் பட்டிருந்ததுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கற்பிட்டிப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கற்பிட்டிப் பொலிஸ் விசேட பணியகத்துக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் கற்பிடடிப் பொலிஸ் பரிசோதகர் ஷான் முனசின்ஹ உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 28 வயதுடைய கற்பிட்டியைச் சேர்ந்த இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்ப்புக்கு மத்தியில் கம்மன்பில உண்மையை அறியவே வந்தாராம்!



வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித் துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள் பிரச்சினையைக் கூறுகின்றார்கள். எனினும், அதன் உண்மைத்தன்மை எமக்குத் தெரியாது. அதனைத் தெரிந்துகொள்வதற்காகவே நான் இன்று இங்கு (குருந்தூர் மலை) வந்தேன்!, என்று குருந்தூர் மலையில் தெரிவித்தார் புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

# நீதிமன்றத்தில் ஆஜரானார் விமல் வீரவன்ச!

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செய்ட் ராத் அல் /ஹுசைன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது, கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கு முன்பாக விமல் வீரவன்ச ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

வீதிகளை மறித்து ஆர்ப்பா 2➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# திருத்தவேலைகள் நிறைபெற்றன மீண்டும் கடலில் இறங்கியது குமுதினி!




திருத்த வேலைகளுக்காக பல மாதங்களாக வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் நிறுத்தப்பட்ட குமுதினிப் படகு, திருத்த வேலைகள் முடிவுற்று மீண்டும் கடலில் இறக்கப்பட்டது.

குறி காட்டுவான் நெடுந்தீவு கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினிப் படகு, அடிக்கடி கோளாறு ஏற்பட்ட நிலையில் குறி காட்டுவானிலிருந்து வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைக்கு திருத்த வேலைகளுக்காக கொண்டு செல்லப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சுமார் எழுபது இலட்சம் ரூபாவுக்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டின் கீழ் அந்தப் படகு புனரமைக்கப்பட்டு, தற்போது மீண்டும் சேவையில் ஈடுபடவுள்ளது.

குமுதினிப் படகை கடலுக்குள் இறக்குவதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை மதியம், பொங்கல் பொங்கி வழிபாடு இடம்பெற்று, சம்பிரதாய பூர்வமாக படகு கடலுக்குள் இறக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை ரேவடி கடலில் இரு நாட்கள் தரித்து, அனைத்துத் தொழில் நுட்பங்களும் சரியாக செயற்படு கின்றனவா?, என ஆராய்ந்த பின்னர் குறி கட்டுவான் நோக்கி குமுதினி பயணமாகவுள்ளது. கடந்த 1968 முதல் நெடுந்தீவுக்கு போக் குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த குமுதினி பயணிகள் படகானது அன்றிலிருந்து நெடுந்தீவு மக்களை வெளியுலகத்தொடர்பில் வைத் திருக்க உதவியாக அமைந்து வருகிறது.

# எதிர்ப்புக்கு மத்தியில் குருந்தூர் மலையில் கம்மன்பில



முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் இன்று சென்றிருந்ததோடு, வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே உதய கம்மன்பில எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதோடு, மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுக்க வேண்டுமென்பது எமது நோக்கம். நான் இங்கு பார்த்தவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும்பிக்குமாருடனும்கலந்துரையாடுவேன். இதனைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பான சரியானதீர்மானம் மேற்கொள்ளப்படும். உங்கள் தரப்பு விடயங்களைக்கேட்டேன்.

இலங்கை தொல்பொருள் திணைக்களம், பிக்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் கதையை நான் கேட்க வேண்டும். இதனைத் தொடர்ந்து, எந்தவொரு தரப்பினரையும் பாதிக்காத வகையில் இந்தப் பிரச்சினை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள்பிரச்சினையைக் கூறுகின்றார்கள். எனினும், அதன் உண்மைத்தன்மை எமக்குத் தெரியாது. அதனைத் தெரிந்து கொள்வதற்காகவே நான் இன்று வந்தேன்.

இது 2,100 வருடங்கள்பழைமையான விகாரை. இந்த விகாரை எமக்கு மாத்திரமின்றி முழு உலகுக்கும் சொந்தமானது. இவ்வாறான பழமையான சொத்துக்கள் வேறு நாடுகளில் இல்லை.

வயல் நிலங்களைத் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களாக பெயரிட மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பில் ஆராய வேண்டும். எதனடிப்படையில் திணைக்களத்தினர் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வயல் நிலங்களுக்கடியில் எதாவது இருப்பதை தொல்பொருள் திணைக்களத்தினர் இணங்கண்டிருந்தால், குறித்த இடம் பாதுகாக்கப்பட வேண்டும்.

மக்களால் எந்த இடத்திலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதனடிப்படையில், மக்களுக்கு எந்தவொரு தீங்கும் நடக்க நாம் இடமளிக்க மாட்டோம், என்றும் உதய கம்மன்பில எம்.பி. குறிப்பிட்டிருக்கிறார்.

## நீதிமன்றத்தில் ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

சம்பூரில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய வர்த்தமானியை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன ஒரே வர்த்தமானியில் மீளப்பெற்றார். அதைப்போன்று வலிகாமம் வடக்கிலும் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனை ஏற்றுக்கொண்டார். அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு காணி அமைச்சை அறிவுறுத்தியிருந்தார்.

அவர்கள் அவ்வாறு செய்யாமல், விடுவிக்கப்பட்ட காணிகளை மாத்திரம் அளவீடு செய்து அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கின்றனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

வலிகாமம் வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் கூட இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீதிமன்றமும் அந்த வர்த்தமானியை மீளப்பெறுவது பற்றிப் பரிசீலிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியிருந்தது.

இவை எல்லாவற்றையும் விடுத்து, விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்து அதனை மாத்திரம் வர்த்தமானியில் பிரசுரிப்பதை ஏற்க முடியாது. தவறான விடயதானத்தோடு வெளியிடப்பட்ட அந்த வர்த்தமானி முழுமையாக மீளப்பெறப்பட வேண்டும்!, என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

## குருந்தூர் ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

கல் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கும் ஆர்ப் பாட்டக்காரர்களால் இதன் போது கடுமையான எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவ நேசன், முன்னாள் புதுக்கு டியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இ.சத்தியசீலன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர் அ.பீற்றர் இளஞ்செழியன், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குருந்தூர்மலை அடிவாரம் மற்றும் குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் அதிகளவில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்வெட்டு ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

வைத்ததோடு, இராணுவத்தினரின் பங்குபற்றுதலுடன் பாரியளவிலான பௌத்த விகாரையும் இரகசியமாகக் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியில், அங்கு தற்போது புதிதாகக் கல்வெட்டு ஒன்றும் பதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், குருந்தூர் மலையில் சட்ட விரோத நில அபகரிப்புடன் பௌத்த மயமாக்கலும் தொடர்ச்சியாக இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## நீதிமன்றத்தில் ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

ட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக அவருக்கு எதி ராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணைக்காக கடந்த 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதன் காரணமாகவே அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்ப டுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# போதகர் ஜெரோம் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரிய மனு மீளப் பெறப்பட்டது

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீளப்பெறப்பட்டுள்ளது.

அதன்படி, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஜெரோம் பெர்னாண்டோ கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி மே 26 அன்று தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை, அவரது தரப்பு சட்டத்தரணிகள் இன்று மீளப் பெற்றுக்கொண்டனர்.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக காவல் கண்காணிப்பாளர் , குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான இயக்குநர் மற்றும் குற்றப்புலனாய்வின் சைபர் கிரைம் பிரிவின் பொறுப்பாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தனது மனுவில், தன்னைக் கைது செய்ய குற்றப்புலனாய்வினர் மேற்கொண்ட முயற்சிகள் சட்டவிரோதமானவை என்றும், நாட்டில் உள்ள மத நல்லிணக்கத்திற்கு தனது கருத்துக்கள் அச்சுறுத்தல் என்பதை நிரூபிக்க பொலிஸார் எந்த ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை என்றும் பெர்னாண்டோ கூறியுள்ளார். பெர்னாண்டோ தனது பிரசங்கம் ஒன்றில், புத்த பகவான் மற்றும் பிற மதப் பிரமுகர்கள் தொடர்பான சில இழிவான கருத்துக்களை வெளியிட்ட காணொளி சமூக ஊடகங்களில் பரவலாகப் பரவி யதை அடுத்து அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.



## சர்வதேச யோகா நாள் நிகழ்வு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில்




சர்வதேச யோகா தின நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது

யாழ் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒன்பதாவது சர்வதேச யோகா நாள் நிகழ்வில் யாழ் மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாணப் படைகளின் கட்டளைத் தளபதி ஹெட்டியாராச்சி, யாழ் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், கல்வியிலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் விபத்து!



(செய்தி: நூருல்ஹுதா உமர்)

அம்பாறை சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றதாகவும் சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமத்தில் இருந்து சம்மாந்துறை ஊடாக மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சாரதி உட்பட 10 பேர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணில் வருகைக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்!

நேற்று முன்தினம் திங்கட்கிழமை லண்டன் சென்று இறங்கிய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை 'ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையாளி' என விமர்சித்து, அவருக்கு எதிராக இரண்டு ஆர்ப்பாட்டங்கள் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டன. முதலாவது ஆர்ப்பாட்டம் லண்டன்பார்க்லேன்ஹோட்டல்முன்றலில் நடந்தது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது. மற்றைய ஆர்ப்பாட்டம் லண்டன் ஜோர்ஜ் ஸ்ட்ரீட்டில் நடைபெற்றது.



## நடாஷாவுக்கு விளக்கமறியல் புருனோ திவாகராவுக்கு பிணை





நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவை எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை, நடாஷா எதிரிசூரியவின் சர்ச்சைக்குரிய காணொளியை சமூக ஊடகத்தில் வெளியிட்ட புருனோ திவாகரா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இருவரும் இன்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## தனியார் கல்வி நிறுவனங்களுடனான கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கமைய செயற்படுக!

### யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மீள வலியுறுத்துகிறார்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் 7 நாட்களும் தனியார் கல்வி நிலையங்களினால் நடத்தப்படும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நிறுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானங்களை யாழ்.மாவட்டச் செயலர் மீள வலியுறுத்தியுள்ளார்.

பிள்ளைகளுக்கு ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைப்பதற்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கான பிணைப்பை ஏற்படுத்துவதற்கும் பிள்ளைகள் பெற்றோருடன் அதிக நேரத்தை செலவிடக் கூடியதாகவும், 9 ஆம் வகுப்பு வரை இணைப்பாடவிதான (கலை மற்றும் விளையாட்டு) செயற்பாடு தவிர்ந்த, ஏனைய பாடத்திட்டக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் சகல தனியார் கல்வி நிலையங்கள், பிரத்தியேகக் குழு வகுப்புக்கள், சூம் தொழில் நுட்பமூடாக நடாத்தப்படும் வகுப்புக்கள் என்பன ஜூலை முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஞாயிற்றுக்கிழமைகளில் முற்றாகவும் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரங்களிலும் வகுப்புகளை நடாத்துவதை நிறுத்துதல், என்பதும் அந்தத் தீர்மானங்களில் ஒன்றாகும்.

ஜூலை முதலாம் திகதி முதல் அந்தத் தீர்மானங்களுக்கமைய செயற்படுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# என் தந்தைக்கு என் தாய் எழுப்பிய அன்புக் கோட்டைதான் கலைஞர் கோட்டம்: தமிழக முதல்வர் ஸ்டாலின் நெகிழ்ச்சி

திருவாரூரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்றுத் திறந்து வைத்தார். 12 கோடி ரூபா செலவில், ஏழாயிரம் சதுர அடி பரப்பளவில் ஆழித்தேர் வடிவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கோட்டத்தை, தனது சகோதரி செல்வியுடன் இணைந்து முதலமைச்சர் திறந்துவைத்தார்.

பின்னர் அங்கு உரையாற்றிய அவர், தந்தைக்குத் தாய் எழுப்பிய அன்பு கோட்டைதான் கலைஞர் கோட்டம். திருவாரூர்த் தேர் அழகு என்பதற்கேற்ப கலைஞர் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூர் காரருக்கு மட்டுமல்ல, டெல்டா மாவட்டங்களுக்கு அங்கு வாழக்கூடிய மக்கள் விழா நடத்தவும் அரங்கங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இதை கட்டிக் காப்பாற்ற வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். கட்டுவது எளிது பராமரிப்பது சிரமம். அதனால் சிரமம் பார்க்காமல் பராமரியுங்கள் என கேட்டுக்கொள்கிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

மறைந்த பிறகும் மருத்துவமனையாக. நூலகமாக இது போன்ற ஒரு கட்டி டமாக இருப்பவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர். கலைஞர் தலைமையி லான அரசைத்தான் நான் நட த்திக்கொ ண்டிருக்கின்றேன். இந்த திராவிட மாதிரி ஆட்சியை கலைஞருக்கு காணிக்கை யாக செலுத்திக் கொண்டிருக்கின்றேன். கலைஞர் என்ன முடிவெடுப்பார் என யோசித்து அதைப்போலவே நான் செயல்படுகிறேன், என்றும் அவர் குறிப்பிட்டார்.

நான் மட்டும் கலைஞர் மகன் அல்ல, நீங்கள் அனைவரும் கலைஞரின் பிள்ளைகள்தான். நாற்பதும் நமது, நாடும்




நமதே நன்றி வணக்கம், என்று கூறி தன்னுடைய உரையை அவர் முடித்தார்.

இந்த நிகழ்ச்சியில், பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# எது தமிழ்? எது சமஸ்கிருதம்? என்று தெரியாத அளவுக்கு மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளது: நடிகர் சத்யராஜ்




தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் திண்டலில் உள்ள தனியார் கல்லூரியில் ரோட்டரிச் சங்கம் சார்பில் “இதயம் காப்போம்“ நடமாடும் பேருந்து மருத்துவ மைய துவக்க விழா நடைபெற்றது.

பொதுமக்கள் மத்தியில் இதயம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மக்கள் இலவசப் பரிசோதனை செய்து கொள்ளவும் மற்றும் சிகிச்சை வழங்கிடும் வகையிலும் இரண்டு கோடி ரூபா மதிப்பீட்டிலான “இதயம் காப்போம்“ என்ற பேருந்து உருவாக்கப்பட்டது.

பேருந்தில் மருத்துவக் குழுவோடு ஊர் ஊராக சென்று பொதுமக்களுக்கு இலவசமாக இதய மருத்துவ பரிசோதனை, சிகிச்சை மற்றும் மருந்துப் பொருட்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதயம் மட்டுமின்றி பெண்களுக்கு மார்பக, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் போன்றவற்றைக் கண்டறியும் பரிசோதனையும் செய்யப்படவிருக்கிறது. அத்தோடு, குடல் நோய்களைக் கண்டறிய குடல் உள்நோக்கி கருவியும் அதற்கான மருத்து வர்களும், ரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள பரிசோதனைச்சாலை வசதியும் இப்பேருந்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்துச் சேவையின் துவக்க விழாவில் கலந்து கொண்ட திரைப்பட நடிகர் சத்யராஜ், சேவையை தொடங்கி வைத்தார். பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டு முதல்வர் மருத்துவத்தை அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சென்று வருகின்றனர். உடல் பரிசோதனை முக்கியத்துவம் குறித்து கிராமப் பகுதியினருக்கு தெரிவதில்லை. மக்கள் நலன் சார்ந்த பணிகள் ஈரோடு பகுதியில் இருந்துதான் ஆரம்பமாகின்றன. அதற்கு காரணமாக பெரியார் பிறந்த மாவட்டமாக ஈரோடு இருக்கிறது.

நமக்கே தெரியாமல் சமஸ்கிருதத்தை உள்ளே நுழைத்து விட்டார்கள். எது தமிழ்? எது சமஸ்கிருதம்? என்றே தெரியாத அளவிற்கு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. எனது இயற்பெயர் ரங்கராஜ், சத்யராஜ் என பெயர் மாற்றினேன். ஆனால், சத்யராஜ் தமிழ்ப் பெயர் இல்லை. மெய்யரசுதான் தூய தமிழ்ப் பெயர். இதெல்லாம் தெரியாத அளவிற்கு சமஸ்கிருதம் கலந்துவிட்டது, என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# மணிப்பூர் மக்களின் உணர்வுகளை புறக்கணிக்காதீர்கள்: எதிர்க்கட்சிகள்



கடந்த ஏப்ரல் மாதம் வன்முறை தொடங்கிய மணிப்பூரில், இன்னும் ஓயாமல் மோதல் வெடித்து வருகிறது. 45 நாட்களுக்கும் மேலாக நடைபெற்றும் வரும் இந்த மோதலில், சமீபகாலமாகப் பாதுகாப்புப் படையினருக்கும் கலவரக்காரர்களுக்குமிடையே வன்முறை வெடித்து வருகிறது. இதில், பா.ஜ.க.வைச் சேர்ந்த அமைச்சர்கள், நிர்வாகிகளுடைய அலுவலகங்களும் தீக்கிரையாக்கப்பட்டு வருகின்றன.

இதன் வன்முறையால் மேலும் உயிர்ப்பலி எண்ணிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது. பெரும் பதற்றம் நிலவுவதால், அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. சூழலைக் கட்டுக்குள் கொண்டுவர பா.ஜ.க. அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் கடுமையாக விமர்சித்து வருகிறது.

இதற்கிடையே மணிப்பூரைச் சேர்ந்த 10 அரசியல் கட்சிகள் டெல்லிக்குச் சென்று பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி திரௌபதி முர்மு ஆகியோரைச் சந்தித்து மணிப்பூரில் உள்ள சட்டம் - ஒழுங்கு நிலை குறித்து விளக்கியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோல், மணிப்பூர் பா.ஜ.க. எம்.எல்.ஏக்களும் நிலைமை குறித்து பிரதமரிடம் விளக்குவதற்காக டெல்லி புறப்பட்டுச் சென்றதாகத் தகவல்கள் கூறின. ஆனால், மணிப்பூரின் வன்முறைக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நிலையில், பிரதமர் மோடி, மன் கி பாத் வானொலி நிகழ்ச்சியில் உரையாற்றியதற்கு அம்மாநில மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனை வெளிப்படுத்தும் வகையில் மணிப்பூர் மாநிலத்தில் பல இடங்களில் வீதிவீதியாக ரேடியோக்களைத் தீயிட்டு எரித்துப் போராட்டம் நடத்தினர்.

மணிப்பூரில் தொடர்ந்து கலவரம் நீடித்துவரும் நிலையில் அது தொடர்பான மனுவை அவசர வழக்காக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

வழக்கறிஞர் கோலில் கோன்சல்வேஸ் என்பவர் விடுமுறைக் கால சிறப்பு அமர்வு முன்பு இடைக்கால மனுவைத் தாக்கல் செய்து அதை உடனடியாக விசாரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். மணிப்பூர் கலவரத்தில் பழங்குடியினத்தைச் சேர்ந்த 70 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், எனவே இராணுவத்தினரின் பாதுகாப்பு வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த வழக்கு அடுத்த மாதம் 17ஆம் தேதிக்கு பட்டியலிடப்பட்டு உள்ளதாகவும், அதற்குள் இன்னும் 50க்கும் மேற்பட்ட பழங்குடியினர் கொல்லப்பட்டு விடுவார்கள் என்றும், எனவே வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். ஆனால், அதனை ஏற்க மறுத்த நீதிபதிகள், வரும் மூன்றாம் திகதி நீதிமன்றம் திறந்தபிறகு விசாரிப்பதாகத் தெரிவித்தனர்.

மணிப்பூர் கலவரம் தொடர்பாக 10 எதிர்க்கட்சிகள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளன. காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம், திரிணாமுல் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சமாஜ்வாடி, ஆம் ஆத்மி உள்ளிட்ட 10 எதிர்க்கட்சிகள் கடிதம் எழுதி உள்ளன.

அந்தக் கடிதத்தில், அனைத்து சமுதாய மக்களுடனும் உடனடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும், மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன. மணிப்பூரில் தனி நிர்வாகம் நடத்தப்படுவதை எதிர்ப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

# செந்தில்பாலாஜி விவகாரத்தில் தமிழக முதல்வர் இரட்டை வேடம் போடுகிறார்!

## மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கருத்து

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசின் 9 ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம் சென்னையில் மேற்கு தாம்பரத்தில் உள்ள சண்முகம் சாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பேசிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தமிழகத்தின் செங்கோல் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் நிறுவியதால் அது தமிழகத்தின் புதிய வரலாறு.

இந்தியா எப்போது, என்ன சொல்லப் போகிறது? என உலக நாடுகள் காத்துக் கிடக்கின்றன. உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் குரலுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. இந்தியா எந்த நாட்டின் மீதும் போர் தொடுக்காது. ஆனால், நமது நாட்டின் மீது யாரும் தாக்குதல் நடத்தினால் அவர்களை விடமாட்டோம். அந்த அளவுக்கு நமக்கு வலு இருக்கிறது. தமிழகத்தில் உள்ள ஆட்சி எந்தளவுக்கு ஊழல் செய்கிறது என்பது இந்தியா முழுவதும் தெரிந்திருக்கிறது. ஒரே ஒரு முறை பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்துங்கள். ஊழலற்ற ஆட்சியை உங்களுக்கு தருகிறோம். பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் நடந்தால் அவர்கள் இருக்கும் இடம் அரசுக் கட்டில் அல்ல, சிறைச்சாலையாகத்தான் இருக்கும்.

இந்தியாவின் பெருமைக்குரிய மாநிலம் தமிழகம். இதனால் தான் எந்தவொரு முக்கிய திட்டத்தையும் பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் இருந்து தொடங்குகிறார். பிரதமரின் ஆசை தமிழகம் ஒட்டுமொத்தமாக முன்னேற வேண்டும் என்பதே! இதை முன்வைத்துத்தான் பிரதமர் பணியாற்றி வருகிறார்.

பிரதமரை பாராட்ட மனமில்லாத எனது நண்பர் மு.க.ஸ்டாலின் பிரதமரை குற்றம் சொல்கிறார். அவரது பெருமைக்கு இழுக்கு ஏற்படுத்துகிறார். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக செந்தில் பாலாஜியை நாங்கள் கைதுசெய்து விட்டதாக மு.க.ஸ்டாலின் தெரிவிக்கிறார். ஆனால், அவர் அ.தி.மு.க.வில் இருந்தபோது இவர் மீது ஏராளமான குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். இரட்டை வேடம் போடுகிறார் முதல்வர்!, என்று தெரிவித்திருக்கிறார்.

# பிரித்தானியாவும் அமெரிக்காவும்; பழிவாங்கப்படும் ரஷ்யா எச்சரிக்கை



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், ஏற்கனவே ரஷ்யா ஆக்கிரமித்துள்ள கிரிமியா உட்பட தனது நிலப்பரப்பு முழுவதையும் மீட்க விரும்புவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இந்த விடயம் ரஷ்யாவை எரிச்சலடையச் செய்துள்ளது என சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா வழங்கியுள்ள ஏவுகணைகளைக் கொண்டு கிரிமியாவைத் தாக்க உக்ரைன் திட்டமிட்டுள்ளதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

அப்படி அமெரிக்க மற்றும் பிரித்தானிய ஏவுகணைகள் கிரிமியாவைத் தாக்குமானால், அமெரிக்காவும் பிரித்தானியாவும் முழுமையாக இந்தப் பிரச்சினைக்குள் இழுக்கப்படும் என ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்ஜி சொய்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிரிமியா தாக்கப்பட்டால், பழிக்குப் பழி வாங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும், என்றும் உக்ரைனுடைய முடிவெடுக்கும் மையங்கள் மீது உடனடித் தாக்குதல் நடத்தப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## மாயமான டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் கிடைக்கும் சமிக்ஞையை வைத்து தேடல்




டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைப் பார்வையிட சுற்றுலாப்பயணிகளுடன் சென்ற 'ஓஷன்கேட்' நிறுவனத்திற்குச் சொந்தமான டைரடன் என்ற நீர்மூழ்கிக் கப்பலில் 40 மணி நேரத்துக்கும் குறைவான தேவைக்கான ஒட்சிசன் மட்டுமே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கப்பலில் இருந்தவர்களை உயிருடன் மீட்பதற்காக தொடர்பு துண்டிக்கப்பட்ட இடத்தை சுற்றிலும் தீவிர தேடுதல் வேட்டை இடம்பெற்று வருகின்றது எனவும், குறித்த பணியில் அமெரிக்கா மற்றும் கனடாவைச் சேர்ந்த கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுவருவதோடு, விமானங்கள், நீர்மூழ்கி கப்பல் போன்றவையும் இத்தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

குறித்த கப்பலில் பிரித்தானியாவைச் சேர்ந்த கோடீஸ்வரரும், ஆராய்ச்சியாளருமான ஹமிஷ் ஹார்டிங் உட்பட 5 பேர் அழைத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில், கப்பல் புறப்பட்டு ஒரு மணி நேரம் 45 நிமிடங்களிலேயே கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்துள்ளது.

டைட்டன் நீர்மூழ்கியைத் தேடும் பணியின் போது கடலின் அடி ஆழத்தில் இருந்து பயங்கர ஒலியுடன் சிக்னல் கிடைத்துள்ளது.

ரிமோர்ட் மூலம் இயக்கப்பட்டு ஆழ்கடலில் ஆய்வுகளை மேற்கொள்ளும் சோனார் கருவி இந்தத் தேடுதல் பணியில் பயன்படுத்தப்பட்ட நிலையில் அந்த கருவி ஆழ்கடலில் நீர்மூழ்கி கப்பல் மாயமான பகுதியில் பயங்கர ஒலியுடன் வித்தியாசமான சிக்னல் வருவதை கனடா விமானப்படையின் தேடுதல் விமானத்திற்கு பகிர்ந்துள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த தகவல் உடனடியாக அமெரிக்க கடற்படைக்கு பகிரப்பட்டுள்ளது.

கடலின் அடியாழத்தில் இருந்து நீர்மூழ்கிக் கப்பல் மாயமான பகுதியில் 30 நிமிட இடைவெளியில் பயங்கர சத்தத்துடன் சமிக்ஞை கிடைப்பதாகவும், அது நீர்மூழ்கி கப்பலில் இருந்து தான் வருகிறதா? என்பது குறித்த உறுதியான தகவல் வெளியாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும், 30 நிமிட இடைவெளியில் பயங்கர சத்தம் கேட்பதால் அது நீர்மூழ்கி கப்பலில் இருந்து வரும் சமிக்ஞை ஒலியாக இருக்கலாம் என்று தேடுதல் குழுவினர் கருதுகின்றனர். இதனைத் தொடர்ந்து அந்த ஒலி எந்தப் பகுதியில் இருந்து வருகிறது என்பதை ஆராய்ந்து அப்பகுதியில் தேடுதல் பணியை அமெரிக்கா, கனடாப் கடற்படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர், என்று அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன.

# துப்பாக்கியால் சுட்டு, எரித்து 41 பெண் கைதிகள் படுகொலை ஹோண்டுராஸ் சிறையில் கொடூரம்!



மத்திய அமெரிக்காவிலுள்ள ஹோண்டுராஸ் நாட்டின் தலைநகர் தெகுசிகல்பா நகரின் அருகே தமரா பகுதியில் மகளிர் சிறை ஒன்று உள்ளது. இந்தச் சிறையில், பெண்கள் மட்டுமே அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறையில் உள்ள கைதிகளுக்கிடையே திடீரென வன்முறை ஏற்பட்டு உள்ளது. குழுக்களாகப் பிரிந்து மோதிக் கொண்ட சம்பவத்தில் 41 கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என, செய்தி வெளியாகியுள்ளது.

இந்த உயிரிழப்புகள் வருத்தம் அளிக்கின்றன என அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை துணை அமைச்சரான ஜூலிஸ்சா வில்லானுவா கூறியுள்ளார். நாட்டின் சட்ட திட்டமானது திட்டமிடப்பட்ட குற்றங்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது எனவும் அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டிலும் இதேபோன்றதொரு சம்பவம் நடந்தது. அதில், ஆண்கள் மட்டுமே உள்ள சிறையில் இருந்த கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 40 கைதிகள் உயிரிழந்திருந்தனர்.

# ஜப்பான் மன்னர் நருஹிட்டோ இந்தோனேசியாவுக்குப் பயணம்




ஜப்பான் மன்னர் நருஹிட்டோ 3 நாள் அரசுமுறை பயணமாக இந்தோனேசியாவுக்குச் சென்றுள்ளார். கடந்த 2019ஆம் ஆண்டு மன்னராக அவர் முடிசூட்டிய பின்னர் செல்லும் முதல் அதிகாரபூர்வ வெளிநாட்டுப் பயணமாக இது அமைந்துள்ளது.

தனது மனைவியும் ராணியுமான மசாகோவுடன் அவர் மேற்கொண்டுள்ள இந்தப் பயணத்தில் இந்தோனேசியா ஜனாதிபதி ஜோகோ விடோடோவை அவர் சந்தித்தார். முன்னதாக, போகோரில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் அவர்கள் இருவரையும் இராணுவ அணிவகுப்பு மரியதையுடன் விடோடோ வரவேற்றார்.

ஜகார்த்தாவில் உள்ள இரண்டாம் உலகப் போரின்போது இறந்தவர்களின் கல்லறைகளுக்கு ஜப்பான் மன்னர் மன்னர் சென்று மரியாதை செலுத் தியுள்ளார்.

காலநிலை மாற்றம், உணவுப் பற்றாக் குறை, கனிம வளங்கள் பாதுகாப்பு குறித்து இருநாடுகளும் கலந்து ரையாட உள்ளதாகக் கூறப்படுகிறது.

# சீனாவின் உயர் தொழில்நுட்ப வளர்ச்சி அடுக்குமாடி ஊடான ரயில் சேவை!



சீனாவில், மக்கள் வசிக்கும் 19 மாடிக் குடியிருப்புக் கட்டடத்தின் ஊடாக புகையிரதப் பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த அடுக்குமாடியில் 6 ஆவது மற்றும் 8 ஆவது தளத்தின் ஊடாக புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டு அதன் ஊடகவே தினமும் புகையிரதங்கள் சென்று வருகின்றன.

இந்த அடுக்கு மாடிகளூடான ரயில் பாதை, சீனாவின் மலை நகரம் என அழைக்கப்படும் சன்கிங் என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, அந்த கட்டடத்திலேயே புகையிரத நிலையமும் இயங்குகிறது.

அந்தப் பகுதியில் புகையிரத பாதை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டபோது அங்கு இடப்பற்றாக்குறை நிலவியிருந்தது. அதன் காரணமாக பொருளியலாளர்கள் வித்தியாசமாகச் சிந்தித்து 19 மாடிக் கட்டிடத்தின் ஊடாக ரயில் பாதையை உருவாக்கியுள்ளனர்.

குடியிருப்புப் பகுதி ஊடாக புகையிரதம் செல்வதால் அங்கு வசிக்கும் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, "சைலென்சிங் டெக்னோலஜி" என்ற நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் புகையிரதம் செல்லும் சத்தம் மக்களுக்கு கேட்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த ஒரு வருட காலக் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி ஆகும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்து ஒரு வருடகால துறை சார் அனுபவமுடைய யாவரும் இக்கற்கை நெறிக்காக விண்ணப்பிக்கமுடியும் என்றும், விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2023இல் வெளியிடப்பெற்றது.